# மனம், மதி - 2

மனமும் மதியும்
நெடுநாள் கழித்து மீண்டும்
சந்தித்துக் கொண்டன;

'எப்படி இருக்கிறாய் மனமே?'
என்று வழக்கம் போல்
கேட்டது மதி;

'ஓ, மிக்க நலம்!'
என்றது மனம்
இனியாய்;

மதிக்கோ சற்றே ஏமாற்றம்;
என்னடா இது
எப்பவும் புலம்புமே
காலந் தள்ளும் மனம் இன்று
இனியாயிருக்கிறது என்று;

'இந்நலத்திற்கு என்ன காரணமோ?
நான் அறியலாமா?'
என்றது மதி;

'அறிந்து என்ன செய்யப் போகிறாய்?'
என்று கூறி தொடர்ந்து
சந்தோஷ வானில் சிறகடித்துப்
பறந்தது மனம்;

1-4-3

மதிக்கோ அடக்கவொண்ணா
ஆர்வம்;
அலட்சியம் செய்கிறதே மனம்
என்று கூடவே
சிறு கோபம்;

'அட, காரணம் என்ன
என்றுதான் சொல்லேன்' — என்று
மறுபடியும் கேட்டது மதி;

கேட்டதோடு இல்லாமல்
காரணம் என்னவாயிருக்கும் என்று
நினைக்கத் தொடங்கியது மதி;

மதியின் அந்த முறையில்
மனதுக்குக் கோபம்;

'உன் ஆராய்ச்சி வேலையைத்
தொடங்கி விட்டாயா?'
'கொஞ்ச நேரம் நான்
சந்தோஷமாயிருப்பது
பொறுக்கவில்லையா உனக்கு?'

'காரணத்தைக் கண்டுபிடித்து
ப்பூ! இவ்வளவுதானா?
இதற்கா இவ்வளவு
ஆர்ப்பாட்டம்?
என்று சொல்லப் போகிறாய்!'

'கேட்டு நான் என்
சந்தோஷச் சிறகை
முறித்துக் கொள்ள வேண்டுமோ?'

'கொஞ்சம் காரணத்தைக்
துணைக்கிடாமல்
சந்தோஷமாய் இருக்கத்தான்
விடேன்!'
என்றது மனம்;

சற்றே யோசித்தது மதி;
சரி! என்று சொல்லி
புன்னகைத்தது;

'ஆமாம், நீ எப்படியிருக்கிறாய்
என்று சொல்லவேயில்லையே?'

என்று மனம் கேட்டு
முடிக்கும் முன்னே
இடத்தை விட்டு
அகன்று விட்டிருந்தது
மதி...

அ. செ
1 ஜனவரி, 2008
பெங்களூர்